॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥

– ஓம் ஶ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: –

अखण्डकार प्राप्त्यर्थं अखण्डानन्द गुरोर्गुरुम् ।
आर्त्तत्राण प्रधानाय भगवान् पूर्णानन्दो गतिः ॥

அகண்டாகாரமான வேதாந்த வாக்கியங்களான தத்துவமஸி (அது நீயாக இருக்கிறாய் முதலியவற்றின் பொருளானது சரியாக விளங்க, ஞானதேவ து கைவல்யம் (ஞானத்தால் மட்டுமே மோக்ஷமுண்டாகும்) முதலான வாக்கியத்தால், ஶ்ரீ அகண்டானந்த சரஸ்தி சுவாமிகளாலும் குருவின் குருவான ஆர்த்தத்ரானர் என்கிற பூர்வாசிரம பெயரினையுடைய அல்லது கஷ்டத்தில் உள்ளவர்களை காப்பாற்றுவதினை முக்கியமானதாக கொண்ட பகவான், பகவான் என்றால் பகம் எனப்படும், ஆறு ஐஷ்வர்யங்களும் பூர்ணமாக, முழுமையாக பெற்ற ஶ்ரீ பூர்ணானந்த தீர்த்த சுவாமிகள் நமக்கு கதி அதாவது நம்முடைய மோக்ஷத்திற்கான வழி.

॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥

- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -

श्रीपूर्णान्दतीर्थस्फुरदमृतगवीविप्रुषाऽऽप्लावितानां
नास्माकं मोक्शचिन्ता प्रविदितमहसं ब्रह्मभावम् गतानाम् ।
किम्त्वेषा बोधधारा विघतितनिखिलाकारसंस्कारकारा
स्वच्छ्न्दं दन्ध्वनीति प्रतिपदमधुना तामनुव्यञ्जयामः ॥ १ ॥

ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தர் எனும் அற்புதமான இந்த தீர்த்தத்தில் உண்டாகும் அமிருதமான வசனங்கள் எனும் தாரையில் குளித்த காரணத்தால் நாம் அந்த இரண்டற்ற ஆத்ம ஜ்யோதியை கண்டுவிட்டோம். அதனால் பிரம்மாத்மாவின் பிரிவற்ற நிலையை அறிந்துகொண்டோம் என்பதால் மோக்ஷத்தினை அடைவது குறித்த எந்த கவலையும் இல்லை. இருந்தும் அந்த அமிருத தாரையினால் அடையப்பட்ட அறிவானது வேகமான பிரவாகமாக சென்று எல்லா ரூபங்களையும்

சம்ஸ்காரம் எனும் சிறையினையும் அடித்து நொருக்கிவிட்டது அவரின் தூய்மையான உபதேசம் எனும் த்வனியினில் எல்லோரையும் பரிபூர்ணன் ஆக்குகின்றது. ஒவ்வொரு பதத்திலும் அந்த பூர்ணாந்தரையே நாம் போற்றுகின்றோம். ஸ்வச்சந்தர் என்பது சிவனையும் குறிக்கும் ஆதலில் அந்த மங்களமயமானவரின் உபதேசத்தால் என்றும் பொருள்படும்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஶ்ரீ பூர்ணானந்தாய நமோ நம꞉ –**

शिक्षा सर्वागमानां निखिलजनमः पावनी कापि दीक्षा
दीक्षा सर्वात्मदृष्टिर्निरवधिकरुणा किं नु वात्सल्यवृष्टिः ।
निष्ठा ब्रह्मात्मविद्याद्युतिददलिततमस्तोमविद्वन्मणीनां
श्रीपूर्णानन्दतीर्थो जगति विजयते सत्प्रतिष्ठा यतीनाम् ॥
२ ॥

எல்லா சாஸ்திரங்களும் எந்த பொருளை கூறுகின்றதோ அதன் மூர்த்தி ரூபமான சிக்ஷை (படிப்பு கல்வி) இவரே, அல்லது எல்லா மக்களின் மனங்களையும் தூய்மைபடுத்தும் ஒரு தீக்ஷை இவரே , அல்லது , அவர் பிரகாசிக்கின்ற ஒரு சர்வாத்ம திருஷ்டி (எல்லாம் ஆத்மா என்கின்ற பார்வை) என்கின்ற காரணமற்ற கணக்கிலடங்காத கருணையோ, அல்லது வாத்சல்யத்தின் மழையோ ஆவார். எப்படியிருந்தாலும் பிரம்மாத்ம வித்யா எனப்படும் அத்வைத ஞானத்தின் பிரகாசத்தால் அஞ்ஞானம் (அறியாமை) எனும் இருளை முழுமையாக நீக்குகின்ற ஞானிகளில் இவர் மேன்மையானவர். (முதலானவர்) சாதுக்களுக்கு சத்தில் (உண்மையில் உள்ள நிஷ்டையின் காரணத்தால் அதன் சமஷ்டி (கூட்டான) கர்மத்தினால் தோன்றிய அவர்களை (உலகத்தோரை) ஆளுகின்ற ஸ்ரீ பூர்ணானந்தரே போற்றி போற்றி.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

सम्भोगे विप्रलम्भे निरुभममभयं भाति भूपो रसानां

विक्षेपे वा समाधौ विहरणनिपुणा ब्रह्मविद्यैव नूनम् ।
इत्थं लोकैरशोकैरनुपदमधिकं भाव्यमानोऽवधूतः
श्रीपूरणानन्दतीर्थः पथि पथि पथिकान् नन्दयन्
बम्भ्रमीति ॥ ३ ॥

ஊடலிலும் கூடலிலும் அல்லதுமாய் உள்ளதுமாய் பயமின்றி இருக்கின்ற அப்படிப்பட்ட ரஸங்களின் (சுவைகளின், ஷ்ருங்காரம் முதலிய) ராஜாவோ, அல்லது விக்ஷேபத்திலும் (தடைகள்) சமாதியிலும் (மனம் அழிந்ததான நிலை) சமமாக வெற்றி நடை போடுகின்ற சாமர்த்தியமுடைய பிரம்மாத்ம வித்யாவே இவருடைய ரூபம் ஆனதோ, இப்படியாக சோகம் நீங்கிய ஆத்மானந்தத்தை அடைந்தவர்கள் உலகத்தில் இவரைப்பற்றியே ஒவ்வொரு வார்த்தையிலும் கூறுகின்றனர் இவர் ஒரு அவதூதர் என்று. இப்படியாக வழியெங்கும் உள்ளவர்களுக்கு ஆனந்தத்தினை தருவதற்க்காகவே இவர் கால்நடையாகவே இந்த உலகத்தில் விசரணம் செய்கின்றார் (நடந்து செல்கின்றார்).

॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥

- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -

ब्रह्मानन्दाब्धिलीलाललितलहरिकाव्यञ्जितासंख्यबिन्दु
ब्रह्माण्डव्रातरोमा विधुतविधिविधुत्र्यक्षविस्तारसीमा ।
संविद्भूमांशुमालोज्ज्वलविमलरुचिध्वस्तमायविलासः
श्रीपूरणानन्दतीर्थो मम मनसि मनागात्मभावं बिभर्त्तुः ॥
४ ॥

பிரம்மானந்தம் எனும் கடலில் லீலையாக உண்டாக்கப்பட்ட அலைகளின் கணக்கிலடங்காத நீர்குமிழிகளான பிரம்மாண்டாமானது இவருடைய மயிர்க்கால்களாகவும். படைத்தல் , காத்தல் மற்றும் அழித்தல் தொழிலை செய்யும் பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரர்களின் செயலின் எல்லைகளானது நொருங்கிவிட்டது. (விதி - விஷ்ணு, விது - பிரம்மா மற்றும் த்ரயக்ஷ- ருத்ரன்). பிரிவுபடாத ஒன்றானதும் அனந்தமானதுமான சம்விதின் (ஞானம் - அறிவு) ஒவ்வொரு துளியிலும் சிதாபாசனின்

(ஆத்மாவின்) தூய்மையான கிரணங்களால் மாயாவின் ஆதிக்கமானது அழிக்கப்பட்டதாகின்றது. அப்படிப்பட்ட குணங்களுடைய ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தர் என்னுடைய மனதிலும் சிறிதளவேனும் அந்த ஆத்ம பாவம் கொண்டு நிரப்புவாராக.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

तीर्थानां नास्ति संख्या विलसति पुरतः कापि तेषामभिख्या
येषां स्नानप्रदानप्रवचनपटिमा कां कलां नातिशेते ।
तच्चित्रं यस्य चित्रं कलितमपि मनाक् छ्रेयसां प्रेयसां च
पारोक्ष्यं संपिधत्ते वितरति परमां पूर्णतामात्मरूपाम् ॥ ५ ॥

தீர்த்த ஸ்தானங்களுக்கு எண்ணிக்கையோ கிடையாது. (தீர்த்த ஸ்தலங்களாவது - புண்ணியதலங்கள் கங்கை, காவேரி, புஷ்கரம் , இராமேஷ்வரம் இதுபோன்ற இடங்கள் மட்டுமல்லாது சாதுக்களும் அவர்கள் சங்கமும் ஆகும்.) அவைகளின் மேன்மைகளோ

நமக்கு முன்னே தோன்றுகின்றது. நமக்கு அனுபவம் உண்டாகின்றது. அப்படிப்பட்ட தீர்த்த ஸ்தலங்களில் ஸ்நானம் (குளிப்பது) , தானம் செய்வது, அல்லது பிரவசனம், பிரசங்கம் செய்வதோ கேட்பதாலே உண்டாகும் சாமர்த்தியமானது எந்த கலையை (புருஷன் (ஆத்மா) 16 கலையுடையது. என்கிறது சுருதி) தாண்ட இயலாது . எல்லாவற்றையும் அது தாண்டிவிடும் என்று பொருள். ஆனால் ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தருடைய சித்திரமானது (திரு உருவ படம்) விசித்திரமானது காரணம், அதனை சிறிது நேரம் கண்டுவிட்டாலும் போதும் அதுவே ஷ்ரயசும் , ப்ரேயசும் என்று கூறப்பட்ட இவ்வுலகத்தின் பேரும் மறுவுலகத்தின் பேரும் உண்டாகும் அது மட்டுமல்லாமல் நம்முடைய உண்மையான இயல்பான பூர்ணமான ஆத்ம ஸ்வரூபத்தினையும் நமக்கு அனுபவமாக்கி விடுகின்றது.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

सा दृष्टिः सूक्ष्मलक्ष्या स्थिरचरविषया वासनास्पर्शशून्या

सा दृष्टिर्दृश्यमुक्तं करणमिव परं सम्प्रसादैकरूपा ।
स दृष्टिर्यत्र नान्यत् सकलमविकलं ब्रह्म प्रत्यक् प्रशान्तं
श्रीपूरणानन्दनेत्रद्वयरसविलसत्कोणकारुण्यमात्रम् ॥ ६ ॥

அந்த திருஷ்டியானது, பார்வையானது மிகவும் சூக்குமமானதினையும் பார்க்கக்கூடியது எதை பார்க்கும் என்றால் அது ஸ்தாவரம் ஜங்கமத்தை அதாவது அசையாததும் அசைவதுமான விஷயங்களையும் கண்டுகொண்டிருக்கும் என்றாலும் வாசனையினால் தீண்டப்படாதது அதுமட்டுமல்லாமல் அந்த பார்வையானது பார்க்கப்படும் விஷயமற்றது, இரண்டு என்று எதுவும் வேறாக இல்லாததால், அதனால் அப்படி விஷயமற்ற காரணமாக உள்ளது போலும், சம்பிரசாதமான (சம்யக் பிரசீததி அதாவது நன்றாக திருப்பியுற்றது) சமாதியாகவே உள்ளது. அந்த திருஷ்டியில் (பார்வையில்) வேறு இரண்டானதான விஷயமே (த்வைதமே) இல்லாததால் நிர்விகாரமான சைத்தன்யமாகவும் தன்னிலிருந்து வேறற்றதான பிரஷாந்தமான பிரம்மமாகவும் உள்ளது. அப்படிப்பட்ட நிலையான ஷாம்பவி முத்ரா என்ற

தாந்திரிகர்களாலும் (சைவ மற்றும் சாக்தர்கள்) , சம்பிரஞ்ஞாத சமாதி என்று யோகிகளாலும் நிரிவிகல்ப சமாதி என்று வேதாந்திகளாலும் அறியப்படுவது ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் கடைக்கண் பார்வையினாலேயே உண்டாகக்கூடியது.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நமः -**

यत्किञ्चिद्वास्तु वस्तु प्रणमत कृतिनो ज्ञानतोऽज्ञानतो वा
श्रीपूर्णानन्दतीर्थामृतकणपवनस्पर्षधन्यं धरण्याम् ।
यत्सम्पर्कादनर्हामिव हरिहरतां मन्यमाना महान्तः
स्वान्तव्योम्नि प्रशान्तं निरुपधिविमलं ब्रह्म पूर्णं लभन्ते ॥
७ ॥

ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்த ஸ்வாமிகளின் மேல் பட்டு அவரின் பாத தூளிகளால் உண்டான சம்பந்தத்தால் இந்த பூமியில் இருக்கும் எந்த பொருளானாலும் அதனை அறிந்தோ அறியாமலோ வணங்குங்கள் , காரணம் ,

இப்படிப்பட்ட பொருட்களின் சம்பந்தத்தால் மஹாத்மாக்கள் (சாதுக்கள்) ஹரி, ஹரன்(பிரம்மா) முதலிய பதவிகளையும் யோக்கியமானது அல்ல என்று எண்ணி தங்களுடைய இதய குகையில் இருக்கும் அந்த ஆகாயத்தில் பிரஷாந்தமானதும், உபாதியற்றதும் (மாயை அற்றதும்) தூய்மையானதுமான அந்த பூர்ணமான பிரம்மத்தினை அடைகின்றனர்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: –**

रे रे ब्रह्माण्डकोटयः फलत बहुविधं रोमकूपेष्वभीक्ष्ण
मीशा रे सावकाशं निजपदविहितां सद्व्यवस्थां विधत्त ।
रक्ता भक्ता विरक्ता विलसत सकलं सत्कले निष्कले वा
श्रीपूर्णानन्दतीर्थं वयमिह कुशला उत्कलं संविशामः ॥ ८ ॥

ஹே பிரம்மாண்ட கோடிகளே, நீங்கள் பலவிதமாக எங்களுடைய மயிர்கால்களில் பலமுறை தோன்றுங்கள் . அந்த பிரம்மாண்டத்தின் ஸ்வாமிகளே நீங்கள் சமயத்திற்க்கு ஏற்ப, உங்கள் பதவிக்கு

அனுசாரமானதுமான (தகுதியானதும்) நிலையில் அந்த பிரம்மாண்டத்தினை நியமனம் செய்வீர்களாக. பக்தர்களே, ஆசையுற்றவர்களே, ஆசையற்றவர்களே நீங்கள் சத்கலத்திலும் (சத்தே, இருத்தலே எதன் தலையோ), முழுமையாக எல்லா கலைகளிலும் அல்லது எந்த கலையும் இல்லாததாகவும் உள்ள ஈஷ்வரனில் நீங்கள் ஈடுபடுங்கள், ஆனால் நாங்களோ , எல்லா லோகத்தினையும் தன்னில் கொண்ட உத்கிருஷ்டமான (மேன்மையான) கலையுடைய ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்த ஸ்வாமிகளை இங்கேயே இப்பொழுதே அடைகின்றோம்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: –**

माया छाया वराकी कथमिवलभतां मय्यनन्ते प्रतिष्ठा
मस्थाने चेश्वरत्वं द्रुहिणहरिहरा हन्त वह्नेः स्फुलिङ्गाः ।
अद्वैते द्वैतखेला गगननलिनवत् स्वप्नवज्जीवमेला
श्रीपूर्णानन्दवाणी श्रुतिशिखरसुधास्वर्णदी नः पुनातु ॥ ९ ॥

துக்கமானதும், கீழ்தரமானதுமான இந்த மாயாவானது சாயா (நிழல்) மாத்திரமே ஆனது அனந்தமான என்னில் எங்ஙனம் இருத்தலை அடையமுடியும். அப்படி அடைவில்லாத நிலையில் ஈஷ்வரத்தன்மையும் யாரில் , எங்கே காணமுடியும் பகவானே ! பிரம்மா , விஷ்ணு மற்றும் மகேஷ்வரர்கள் என்னில் நெருப்பில் தோன்றிமறையும் நெருப்பு துளிகள் போன்றவர்கள். அத்வைதமான இந்த இரண்டற்ற நிலையில் த்வைதமானது தோன்றுகின்றது என்பது ஆகாய தாமரைப்போன்றோ அல்லது ஆகாயத்தில் அழுக்கு தோன்றுவது போன்றோ இல்லை அதனில் தலம் தோன்றுவது போன்றோ ஆனது. ஜீவர்களுடைய சம்பந்தமோ என்றால் கனவிற்கு சமமானது ஆகும் என்று கூறுகிறார் ஶ்ரீ பூர்ணானந்த தீர்த்த சுவாமிகள் . இந்த வாக்கானது ஷ்ருதியில் சிகரமான (தலையான) வேதாந்த வாக்கியமான வாக்கு கங்கை பிரவாகமானது நம்மை தூய்மை படுத்தட்டுமாக.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஶ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: –**

भक्तिःश्रद्धैकमूला विरहितविषया बोधमूलं विरक्ति

दिंध्यासा लक्षितेऽर्थे श्रवणमननजा सम्प्रसूते समाधिम् ।
ज्ञानाभ्यासप्रधाना घनरतिरुदिता हन्त्यविद्यामवद्यां
श्रीपूर्णानन्दतीर्थे वचसि वयममी निर्भरं मज्जिताः स्मः ॥
१० ॥

பக்தி என்பது சிரத்தையினையே சார்ந்திருப்பது. பிரம்ம ஞானமோ இந்த உலகத்திலும் வேறு உலகத்திலும் உண்டாகும் போகத்தின்மேல் பற்றற்ற வைராக்கியத்தினையே சார்ந்திருப்பது. அத்வைத வாக்கியார்த்தினில் சிரவணம், மனனம் மற்றும் நித்தியாசனம் (கேட்டல் , சிந்தித்தல் , தெளிதல்) பழகுவதால் அதன் லக்ஷியார்த்ததில் மனம் ஒருமைபடும் சமாதியினை அளிக்கிறது. இப்படிப்பட்ட ஞான அப்யாசத்தினால் உண்டாகும் மேன்மையான ஆனந்தமானது (பிரம்மானந்தம்) தோன்றி இரட்டை , முப்புடியாக தோன்றும் அவித்தையினை அழிக்கின்றது. இப்படிப்பட்ட ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் வசனம் எனும் தீர்த்ததில் நாம் (நான்) நிம்மதியாக மூழ்கிவிட்டோம்.

॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥

- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -

श्रीपूर्णानन्दकल्पद्रुमतलरजसा पाविते भूप्रदेशे
यस्मिन्कस्मिन्निषीदन् सपदि निजपदे शान्तवृत्तिर्निसर्गात् ।
दर्शं दर्शं स्वरूपं परिणतविधुरं ब्रह्म निर्भेदमद्धा
न श्रद्धां नानुबन्धं श्रुतिशिखरगिरामाग्रहं नानुमन्ये ॥ ११ ॥

விரும்பியதினைவனே அளிக்கும் கல்பவிருக்ஷத்தினைப்போன்ற ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தருடைய பாத கமலங்களின் தூசியினால் தூய்மையடைந்த தலத்தில் , எப்படிப்பட்ட இடமானாலும், எப்படிப்பட்டவரானாலும் (சதா சஞ்சலம் அடையும் மனதுடையவரானாலும்) அந்த நிலத்தில் அமர்ந்ததுமே எந்த சாதனையும் (முயர்ச்சி) இல்லாமலேயே தன்னுடைய இயல்பான , உண்மையான நிலையான சாந்தமான விருத்தியனை (அகண்டாகார விருத்தியினை) உடனே அடைவார். அகண்டாகாரமான இரண்டற்ற நிலையான மாற்றமற்ற பிரம்மமான தன்னுடைய உண்மை நிலையானது சாக்ஷாத்காரம்

அடையப்பெருகின்றது. இதனால் எனக்கு, சிலர் அபிப்பிராயப்படும் , சிரத்தை, சாதனா சதுஷ்டயம் (விவேகம், வைராக்கியம் முதலியவை) மற்றும் வேதத்தின் முடிவான வேதாந்த வாக்கியத்தின் சிரவணம் (கேட்டல்) ஆகியவை இல்லாமல் ஒருவர் ஞானத்தினை அடைய முடியாது எனக்கூறும் வார்த்தைகளில் எந்த ஒரு பிடிப்பும் இல்லை.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

यस्याज्ञा धर्मशास्त्रं सहजशुचिकथा ब्रह्मविद्यानवद्या
ध्यानं सर्वात्मभावं स्थिरचरहितकृत्छेमुषी शान्तिभूषा ।
आश्चर्यं चारुचर्य्या जननयनमनोमोहिनी मुक्तवर्या
तं पूर्णानन्दतीर्थं गुरुममृतमृतं ब्रह्ममूर्तं प्रपद्ये ॥ १२ ॥

எவருடைய கட்டளை தர்ம சாஸ்திரமோ எவருடைய இனிமையான, அமுதமயமான தூய்மையான சாதாரணமான பேச்சே தோஷமற்ற பிரம்மவித்தையோ, எவருடைய த்யானம் சர்வாத்மபாவமானதோ (எல்லாம்

தானே, தன்னிலே) எவருடைய ஸ்திரமான சஞ்சலமற்ற சாந்தம் எனும் அலங்காரத்தால் அலங்கரிக்கப்பட்ட புத்தி எல்லோருக்கும் நன்மை தருகின்றதோ. (அல்லது) எவருடைய சாந்த ரூபத்தால் அலங்கரிக்கப்பட்ட புத்தியானது இங்கு ஸ்திரமானதும் சஞ்சல்மானதுமான (நிற்பதுவும் நகர்வதும்) எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையையே அளிக்கின்றதோ. எவருடைய மிகவும் அழகு பொருந்திய (அல்லது) நல்ல நடத்தையானது எல்லா ஜனங்களின் கண்களையும் மனதினையும் கவரக்கூடியதும் முக்தியடைந்த பெரியோர்களும் விரும்புவதுமானதோ அப்படிப்பட்ட அமிருதமானதும் (மரணத்தினை நீக்கவல்லதும்) ரிதமானதும் (உணமையானதும்) ஆன ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்த குருகளுடைய பாதங்களை நான் பணிகின்றேன். ஏனெனில் அது மூர்த்தமான (உருவமுடைய) பிரம்மமே ஆகும்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

आनन्दब्रह्मविद्यामधिजिगमिषवस्तैत्तिरीया गभीरं

मीमांसन्ते स्म विश्वं तदुदयविलयं निर्भयास्तत्स्वरूपम्।
कल्याणी काण्ववाणी विमृशति मधुरं वीणयन्ती च तत्त्वं
तत्पूर्णानन्दतिर्थे मधुनि वयममी निर्द्वयं लीलयामः॥ १३॥

ஆனந்த பிரம்மத்தின் அறிவை அடைய ஆசைகொண்டு தைத்திரீய சாகையினை (பாகத்தினை) சேர்ந்தவர்கள் அங்கு கூறப்பட்ட ஆனந்த மீமாம்ஸை பாகத்தினை மீமாம்ஸை (பூஜித விசாரம் - மேன்மையான விசாரம்) செய்கின்றனர். அதனிலேயே இந்த ஜகத்தானது தோன்றுவதும், இருப்பதும் , அடங்குவதும் ஆகின்றது என்று எந்தவித சந்தேகமுமில்லாமல் இந்த ஜகத்தினை பிரம்ம சுவரூபம் என்கின்றனர். ஆனால் காண்வ சாகையை சேர்ந்தவர்களோ அங்குள்ள மது பிரம்மணத்தில் கூறப்பட்டதுபோல அந்த பிரம்மத்தினை மது - தேன் போன்று இனிமையானது என்று இனிமையாக வர்ணிக்கின்றனர். அதனால் அப்படிப்பட்ட இனிமையும் பூர்ண ஆனந்தமும் கூடிய ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரில் நாமும் இப்போது இரண்டற கலந்து களிக்கின்றோம்.

॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥

- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -

धर्मः कर्मविशेष एष विहितः शास्त्रैर्मनः शुद्धये
शुद्ध्या सिद्धपदार्थबोधनविधा निर्बाधमाधीयते ।
तत्त्वं त्वं तदिति प्रमा श्रुतिरमा भेदभ्रमापोहिनी
पूर्णानन्दपदप्रसादपरमा सद्यः क्षमा मुक्तये ॥ १४ ॥

யாகாதிரேவ தர்மம் என்று குறிப்பிடப்பட்டதுவோ தர்மம் என்பது வேதத்தில் குறிப்பிடப்பட்ட விசேஷமான கர்மமேயாகும். இதனை சாஸ்திரமானது தூய்மையான மனதினையடைய விதிக்கின்றது (சித்த சுத்திக்காக என்று பொருள்). சித்த சுத்தி எதற்க்கென்றால் அப்படிப்பட்ட தூய்மையான சித்தத்தாலேயே சித்தமானதான (எப்பொழுதும் அடையப்பட்டதாக இருப்பதான அந்த பிரம்மத்தினை குறித்த ஞானமானது எந்த தடையும் இல்லாமல் தெளிவாகின்றது - நீ அதுவே , அது நீயே - என்று இந்த ஞானமானது (பிரமாவானது) சுருதிகளின் செல்வமானது நம்முடைய பேதம் (பிரிவு ,

வெவ்வேறு) என்கிற பிரமையை (தவறான அறிவினை) போக்குவதாகும். இதனாலேயே ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் பூர்ணமான ஆனந்த நிலையை நாமும் இப்பொழுதே அடைவதற்க்கு இதுவே பிரமாணமாகும் (ஞானத்தினை அடைய சரியான வழியாகும்.)

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: –**

क्षीराब्धिस्नापिताङ्घ्रप्रथितगिरिशिरोनीलरत्नाङ्कजन्मा

ऽऽर्त्तत्राणैकान्तशिक्षः क्षपितकलिमलोलब्धसंन्यासदीक्षः ।

ब्रह्मात्मैक्यानुभूतिप्रखररविकरोद्धूतमोहान्धकारो

विश्वात्मा प्रत्यगात्मा विहरतु हृदये पूर्ण आनन्दतीर्थः ॥

१५ ॥

பாற்கடலானது , மலையரசனான நீலாசலத்தின் பாதங்களை நீராட்டிக்கொண்டிருக்கின்றானோ அப்படிப்பட்ட இடத்தில் பிறந்து, மற்றவர்களின் துயரத்தினை நீக்குவது என்பது மட்டுமே குறியாக எல்லா சாஸ்திரத்தையும் படித்து, அதனால் தன்

மனதிலிருந்து கலியுகத்தில் மலங்களை நீக்கி, சன்யாச தீக்ஷயினை ஏற்றார். பிரம்மம் மற்றும் தன்ஆத்மாவின் (பிரத்யகாத்மாவின்) பிரிவற்ற நிலையின் அனுபவத்தால், சூரியனின் கிரணங்களால் இருள் நீங்குவதுபோல மோகத்தை தரும் இருளினை நீக்கினார். அப்படிப்பட்ட விஷ்வாத்மாவான (விஷ்வம் - உலகம் அதன் ஆத்மா, தன்னிலேயே இருக்கிறது என்ற பாவனையால்), பிரத்யகாத்மாவான (பிரத்யக்- தன், ஆத்மா, தானே எல்லாம் என்பதால்) ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தர் என் இதயத்தினை எப்பொழுதும் நீங்காது முழுமையாக அடையட்டும்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம꞉ -**

आविर्भूतं पुरस्तान्महदहह महो यद्रहो योगिगम्यं
रम्यं स्वानन्दपूर्णं स्मितललितमुखं स्निग्धमुग्धावलोकम् ।
आस्लिष्यद्वक्षसाऽलं विमृशदतिरसान्मूर्ध्नि हस्ताम्बुजाभ्यां
लीलाशीलान्तरङ्गं मम नयनयुगं निर्युगं सञ्चकास्तु ॥ १६ ॥

தீர்க்ககாலம் இடைவிடாது அப்யாசத்தினால் யோகிகள் அடையும் அந்த மகத்தான திவ்ய ஜோதியானது (எந்த முயர்ச்சியும் அற்ற ) என் கண்களுக்கு முன்னால் தோன்றியுள்ளது. மிகவும் ஆச்சரியப்படக்கூடியதே. அப்படிப்பட்ட மிகவும் ரமணீயமாகவும் (விரும்பக்கூடியதாகவும், மனதை கவரக்கூடியதாகவும்) தன்னுடைய இயல்பான ஆனந்தத்தினால் பூர்ணமாகவும், புண்முருவலில் பூக்கும் அழகிய முகம் உடையதாகவும் , ஸ்நேகம் பொருந்தியதும் எளிமையுடையதாகவும் ஆன பார்வையோடும் என்னை தன்னோடு சேர்த்து அனைத்துகொள்ளவும் தன்னுடைய தாமரை போன்ற கைகளினால் என் தலையினை வருடவுதுமான லீலையே தன் குணமாக கொண்ட இதயத்தையுடைய இந்த திவ்ய ஜோதியானது என் கண்களுக்கு முன்னால் காலம் நேரம் முதலிய கற்பனையால் தீண்டப்படாது பிரகாசிக்கின்றது.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

पूर्णानन्ददया दृशा रसदया शश्वत्प्रसादोदया
ब्रह्मज्ञानविनोदया जनमनोमोदाय निःखेदया ।
विश्वप्रेमविकासहासमुदया त्रैलोक्यसम्पद्दया
पूर्णानन्ददया मदीयमनसे काञ्चित्कणां यच्छतु ॥ १७ ॥

ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் திருஷ்டியானது (கடைக்கண்பார்வை) அகண்டாகார ரசத்தினை தருவதும், எப்பொழுதும் அடுத்தவருக்கு பிரசாதத்தினை (ஆசியினை) தருவதும், பிரம்ம ஞானத்தினை தருவாதான வினோதமானதும், தடையில்லாமல் ஜனங்களின் (பக்தர்களின்) மனதினை ஆனந்தத்தில் நிலைபடுத்துவதும், தன்னுடைய புன்னகையால் இந்த உலகத்தில் சாந்தியினை (அன்பினை) வளர்ப்பதும், மூவுலகத்தில் உள்ள எல்லா வகை சுகத்தினையும் தருவதுமானது அப்படிப்பட்ட அந்த பூர்ணாமான (முழுமையான) ஆனந்தத்தினை தரும் தயையில் அவர் எனக்கும் சிறிய அளவில் தானம்

அளிக்கட்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஶ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

श्रीकृष्णार्जुनसङ्कथामृतनिधेर्धीरं गभीरं तलं
तत्त्वान्वेषणतत्परैरधिगतं कैःकैर्न सद्धीवरैः ।
किन्तु प्रत्नविचाररत्ननिकरानानीय दाने प्रभुः
पूर्णानन्दमृते न कश्चिदिति तं सर्वात्मना संश्रये ॥ १८ ॥

ஶ்ரீ கிருஷ்ணர் ஆசாரியராகவும் அவருடைய சிஷ்யராக அர்சுனனும் நடத்தும் சம்பாஷனையானது அமிர்த கடல் போன்றது. அதன் ஆழத்தில் இருக்கும் மேன்மையானதும் கம்பீரமானதுமான தத்துவத்தினை விசாரிக்க விரும்பும் புத்திசாலிகளான பலரில் சிலர் சரியாக அதனை புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அப்படிப்பட்ட ஆழ்கடலில் உள்ள பழமையான விசார ரத்தினங்கள் சரியாக கண்டறிந்து அதனை உலகத்தவருக்கு தருவதில் ஶ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் சாமர்த்தியத்தை போல வேறு எவரிடமும் காணப்படவில்லை. என்பதால்

நான் அவரை முழுமையாக சரணடைகின்றேன்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம꞉ -**

जीवन्मुक्तिर्विशिष्टा बतविगतवपुर्मुक्तिरिष्टेतिपृष्टः
सुस्पष्टं योन्वगृह्णाद् उभयमपि मृष सादितासन्तताभ्याम् ।
मोहापायोपलक्ष्यः स्वयमयमभयो मुक्तिरात्मैव नान्या
पूर्णानन्दाय तस्मै प्रणिहितमनसा संदधेऽहं नमांसि ॥ १९ ॥

இந்த சரீரம் இருக்கும் போதே அடையப்படும். ஜீவன் முக்தியானது மேன்மையானதோ அல்லது சரீரம் விழுந்தவுடன் (இறந்தவுடன்) அடையப்படும். விதேக முக்தி விரும்பத்தக்கதா என்று கேட்கப்பட்டதற்க்கு மிகவும் தெளிவாக பதில் கொடுத்து அனுகிரஹித்தார், இரண்டுமே மித்யையாகும் துவக்கம் மற்றும் முடிவு இருப்பதாக உள்ளதால். (துவக்கம் அல்லது முடிவு உடையது அநித்தியம் (நித்தியமற்றது) என்பதால்). மோகமான அறியாமையின்

அழிவால் குறிக்கப்பட்ட பயமற்ற நிலையாக இருப்பதான ஆத்மாவே முக்தியாகும், வேறெதுவும் இல்லை என்று அருளிய ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்த சுவாமிகளை நான் என் முழுமனதால் மீண்டும் மீண்டும் நமஸ்கரித்து தியானிக்கின்றேன்.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம꞉ –**

स्वर्णस्वर्णप्रभाभिः श्रुतिहृदयनभोव्यापिनीभिर्मनोज्ञा
भावाभावप्रभावोज्झितहितमणिभिर्विस्फुरद्भिः प्रपूर्णा ।
श्रीपूर्णानन्दतीर्थागमनिगम रसोल्लास सम्पन्निधानी
मञ्जूषा काऽपि वाणी मम मनसि मनाङ् मन्दिरे चाकसीतु ॥ २० ॥

தங்கத்தைப்போன்று பிரகாசத்தினால் சுருதியின் (சாஸ்திரத்தின்) இதயம் எனும் ஆகாயத்தில் எங்கும் பரப்புக்கின்றது. பாவம் (இருத்தல்) மற்றும் அபாவம் (இன்மை) ஆகியவற்றின் பிரபாவத்திலிருந்து

(ஆதிக்கத்திலிருந்து) விடுப்பட்ட இதமான மணிகளால் நிறையப்பெற்றது . ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் ஆகமம் மற்றும் நிகமம் ஆகிய ரஸத்தின் நிறையப்பெற்ற பொக்கிஷத்தின் குவியில், அப்படிப்பட்ட மோக்ஷத்தை அளிக்கக்கூடிய அவருடைய சொற்கள் எனும் கதம்பமானது என்னுடைய இதயக்கோவிலில் எப்பொழுதும் பிரகாசித்து கொண்டிருக்கட்டுமாக..

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம: -**

वैकुण्ठः केन दृष्टः श्रवणपथगतः स्वप्नवद् भाति चित्ते

तद्वृत्तीनां निरोधः सहजशयनवत् तत्र को वा प्रमोदः ।

प्राक्प्रत्यग्भावमुक्तं तदिदमहमिति ब्रह्म पूर्णं नचान्यत्

पूर्णानन्दोपदेशो दिशि विदिशि सदामङ्गलं देदिशीतु ॥

२१ ॥

வைகுண்டம் எவரால் பார்க்கப்பட்டது, அது வெறும் கேள்வி ஞானம் மட்டுமே. ஒரு

கனவில் கண்ட விஷயத்தைபோல சித்தத்தில் (இதயத்தில்) பிரகாசிக்கின்றது, அப்படிப்பட்ட சித்தத்தின் விருத்திகளை (எண்ண அலைகளை) அடக்குவதான யோகமும் அதன் அனுபவமும் சகஜமான தூக்கத்தினைப்போன்றதே அதில் எண்ண வகையான ஆனந்தம் இருத்தல் இயலும். ஆனால் இப்படி வைகுண்டத்தை போன்று வெளியிலும், யோகத்தை போன்று உள்ளிலும் எந்த வகையான பாவத்தையும் (நிலையினை) அடையாது இது என்னும் நான் என்றும் இடைவிடாது பிரகாசிப்பது பிரம்மத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்ற ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தரின் உபதேசமானது எல்லா திசைகளிலும் திசைகளற்ற இடத்திலும் எப்பொழுதும் நன்மையை அளிக்கட்டுமாக.

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**- ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நம꞉ -**

अखण्डानन्दसम्बोधपूर्तये ब्रह्ममूर्त्तये ।

सुधास्मितसमाश्लिष्टनेत्रान्तस्फूर्तये नमः ॥ २२ ॥

அகண்டானந்த ஞானத்தின் முழுமையுருவே, பிரம்மத்தின் சாகார

(உருவமுடைய) வடிவே, கருணை பொங்கும் இனிமையான அமிருதமயமான புன்னகைபூத்து ஜொளிக்கும் கண்களையுடைய ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்தருக்கு என்னுடைய நமஸ்காரம்.

इति श्रीमत्स्वामि अखण्डानन्दसरस्वती विरचित गुरुदेवश्रीपूर्णानन्दतीर्थस्तवः विश्रामः ॥

ஸ்ரீமத் ஸ்வாமி அகண்டானந்த ஸரஸ்வதீ எழுதிய குருதேவர் ஸ்ரீ பூர்ணானந்த தீர்த்த ஸ்தவம் முற்றும் .

**॥ ॐ श्री पूर्णानन्दाय नमो नमः ॥**

**– ஓம் ஸ்ரீ பூர்ணானந்தாய நமோ நமः –**

ஒடியா பாபா என்று அன்புடன் அறியப்படுகின்ற ஸ்ரீமத் ஸ்வாமி பூர்ணானந்தரின் சிஷ்யரான ஸ்ரீ ஸ்வாமி அகண்டானந்தர் தனது குருவின் மேலுள்ள பக்தியின் வெளிப்பாடானது இந்த புத்தகம் என்பதால் பக்தியிலும் , குருவின் உபதேசம் அடங்கியதனால் ஞானத்திலும்